யிருக்கிறார்கள். எனவே அதை முறைப்படுத்தி, மதகுகளை ஒழுங்குபடுத்தி, பாசனத்திற்கு நீர் விடுவதையும் முறையாகச் செய்து விவசாயிகளுக்கு நல்ல வசதியைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியாறு மதகில் குறை இருக்குமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஆறி வுறுத்திச் சொல்லி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். தண்ணீர் விடுகிற பிரச்சினையில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எங்கள் துறையைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர் கலந்து பேசி ஒரு சுமுகமான நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு —ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் கொடுத்த ஓர் அறிவிக்கை குறித்து.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28—3—1987 அன்று நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என் சம்பந்தமான பிரச்சினை. அறைக்கு வாருங்கள் பேசலாம்.

(ஆ) முந்தைய நாள் நடைபெற்ற அலுவல் குறித்து.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of Order. நேற்றைய தினம் தாங்கள் நல்ல பரந்த மனப்பான்மையோடு, கருணை உள்ளத்தோடு 'ஆனந்த விகடன்' ஆசிரியருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது point of orde அல்ல. என்னிடம் நீங்கள் கேட்கவில்லை. (குறுக்கீடு). நீங்கள் என் முன் அனுமதியைக் கேட்கவில்லை. என்னை பேச வைத்து விட்டு பிறகு அதை நீக்குவது சரியல்ல. நானே பேசியதை